# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.25/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 3 ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஈஸ்வரன் | மதம் | : இந்து |
| த/பெ | : சிவலிங்க ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 45 | கிராமம் | : தெக்களூர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**20.11.2024**

<u>வா.சா. 3 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி ரமேஷ்தான் சாட்சி சொல்ல அழைத்து வந்தார் என்றால் சரிதான். ரமேஷ் எனது உடன் பிறந்த தம்பி என்றால் சரிதான். பிரதிவாதிகள் ராணி,ராஜாத்தி, கஸ்தூரி, பாலாஜி ஆகியோர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நடேச ரெட்டியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்துக்கள் ஆதியில் நடேச ரெட்டியின் பெயரில் இருந்தது என்றால் சரிதான். நடேச ரெட்டிக்கு சொத்துக்கள் எப்படி வந்தது என்பது தெரியுமா என்றால் அவர் சுயமாக சம்பாதித்தது ஆகும். சொத்துக்களை நடேச ரெட்டி அவர் திருமணத்திற்கு முன்பு வாங்கினார் என்பதையும் அவர் சுயமாக சம்பாத்தித்தது என்பதையும் என்னால் நிரூபணம் செய்ய முடியுமா என்றால் இல்லை.

2. நடேச ரெட்டிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 3 வாரிசுகள். பாரதி, ஜெயந்தி, சதீஷ் ஆகும். நடேச ரெட்டிக்கு மொத்தம் 5 வாரிசுகள் என்றால் இல்லை. 3 பேர்தான். நடேச ரெட்டியின் தாயார் அமிர்தம்மாள், மனைவி முனியம்மாள் ஆகியோர் நடேச ரெட்டியின் வாரிசுகள் என்றால் முனியம்மாள் என்பவர் உள்ளார். எனது பிரமாண வாக்குமூலத்தில் "**11.09.2014 அன்று இரு**

**செட்டில்மெண்ட் மூலம் எழுதி கொடுத்தது உண்மை"** என்று கூறியிருப்பதில் நான் எந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் சாட்சி கையெழுத்து செய்தேன் என்றால் ஜெயந்தி முனியம்மாள் சேர்ந்து பாரதிக்கு எழுதி கொடுத்த ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்திட்டேன்.

3. நான் சொல்வது தவறு என்றாலும் அன்றைய தேதியில் ஒரே ஒரு செட்டில்மெண்ட்தான் எழுதப்பட்டுள்ளது என்றாலும் அந்த ஒரு செட்டில்மெண்ட்டில்தான் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். நான் கையெழுத்து போட்டது எந்த வகையான ஆவணம் என்றால் பூர்வீக சொத்தை அவர்கள் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார்கள். நான் கையெழுத்திட்ட ஆவணத்தின் ஆவண எண் சொல்ல முடியுமா என்றால் ஞாபகமில்லை. நான் கையெழுத்திட்ட ஆவணத்தின் தேதி சொல்ல முடியுமா என்றால் ஞாபகமில்லை. நான் அந்த ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை.

4. அந்த ஆவணத்தில் என்பதை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. சாட்சி கையெழுத்து போட கூப்பிட்டதால் சாட்சி கையெழுத்து போட்டேன். அந்த ஆவணத்தை எந்த எந்த ஆவணங்களை வைத்து எழுதினார்கள், அசல் ஆவணங்கள் யார் கைவசம் உள்ளது என்பது கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை யார் தயார் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் அடிக்கடி வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு போய் வருவேன் என்றால் என் வேலைக்கு போவேன். எனக்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் நிறைய பேர் பழக்கம் என்றால் எனக்கு யாரையும் தெரியாது.

5. யாருக்காவது தேவைப்பட்டால் நான் சாட்சி கையெழுத்து போடுவது வழக்கம் என்றால் யாராவது முக்கியமான நபர் கூப்பிட்டால் நான் போடுவேன். என் தம்பிக்கு ஏகப்பட்ட கடன் இருக்கிறது என்றால் அது எனக்கு தெரியாது. என் தம்பிக்கு பாத்தியப்பட்ட எங்கள் குடும்ப சொத்தை நான் கிரையமாக வாங்கியுள்ளேன் என்றால் நான் வாங்கவில்லை. என் அண்ணன் வாங்கியுள்ளார்.

நான் என் மகள் திருமணத்திற்கு சேர்த்து வைத்த நகை, பணத்தையும் என் தம்பி கடனுக்காக கொடுத்துள்ளேன் என்றால் நான் விருப்பப்பட்டு கொடுத்தேன். ஜெயந்தி, முனியம்மாள் கையெழுத்திட்டதாக சொல்வதில் அமிர்தம்மாள் கையெழுத்திட்டாரா என்றால் அவர் அதற்கு முன்பே இறந்துவிட்டார். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் மேற்படி ஆவணத்திற்கு பின்புதான் அமிர்தம்மாள் இறந்துள்ளார் என்றாலும் அவர் அதற்கு முன்பே இறந்துவிட்டார். வாதி எனது தம்பி என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. நான் நடந்ததைதான் சொல்கிறேன்.

(மறு விசாரணை இல்லை)